SHANKAR IAS ACADEMY™

THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

**(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)**



## செல்வி. ஜெ. ஜெயலலிதா

## பகுதி - I


SHANKAR IAS ACADEMY

AP-2241, 2nd Floor, 12th Main Road,
Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.
www.shankariasacademy.com
Email : tnpscfeedback@shankarias.in

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 10. செல்வி.ஜெ. ஜெயலலிதா

## (பகுதி – I)

### தொடக்கக் காலம்

- செல்வி.ஜெ. ஜெயலலிதா அவர்கள் கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டத்தில் **மேலுகோட்டே** என்னும் ஊரில் 1948 பிப்ரவரி 24 இல் பிறந்தார்.
    - இவரின் இயற்பெயர்: கோமளவல்லி
- இவரின் பெற்றோர்: ஜெயராம் - வேதவல்லி (சந்தியா)
- இவர் கல்வி பயின்ற நிறுவனங்கள்
    - பிஷப் காட்டன் பெண்கள் உயர்நிலைப் பள்ளி (பெங்களூர்)
    - சர்ச் பார்க் கான்வென்ட் (சென்னை)
- இவர் பள்ளிப் படிப்பை முடித்த பின்னர் திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினார்.
    - இவர் நடித்த முதல் தமிழ் திரைப்படம்: “வெண்ணிற ஆடை” (1965)
    - இவர் நடித்த கடைசி தமிழ் திரைப்படம்: “நதியைத் தேடி வந்த கடல்” (1980)

### பொது வாழ்க்கை

- இவர் 1982 இல் அஇஅதிமுக வில் உறுப்பினராக இணைந்தார்.
- 1982 இல் கடலூரில் நடைபெற்ற கட்சி மாநாட்டில் **பெண்ணின் பெருமை** என்னும் தலைப்பில் ஆற்றிய உரையே இவரின் முதல் அரசியல் மேடை பேச்சாகும்.
- 1982 இல் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களால் கொண்டுவரப்பட்ட “முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தின்” **உயர்மட்டக்குழு உறுப்பினராக** செல்வி.ஜெ. ஜெயலலிதா அவர்கள் நியமிக்கப்பட்டார்.
- 1984 இல் இவர் மாநிலங்களவை (Rajya Sabha) உறுப்பினர் ஆனார்.

SHANKAR IAS ACADEMY

- 1987 இல் எம்.ஜி. ராமச்சந்திரன் இயற்கை எய்தினார். இதனைத் தொடர்ந்து அக்கட்சியானது இரு அணிகளாகப் பிரிந்தது.
  - ஜெயலலிதா தலைமை (ஜெ அணி)
  - ஜானகி ராமச்சந்திரன் தலைமை (ஜா அணி)
- 1989 ஆம் ஆண்டின் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியானது. ஜெயலலிதா தலைமையிலான ஜெ அணி ஆனது செல்வாக்கு உடையது என உறுதி ஆனது. ஆதலால் இரு அணிகளும் ஒன்றாகி ஒன்றுபட்ட அஇஅதிமுக உருவானது.
  - 1989 ஆம் ஆண்டு **போடி நாயக்கனூர்** தொகுதியில் வெற்றி பெற்ற இவர் சட்டமன்றத்தின் **எதிர்க்கட்சித் தலைவர்** ஆனார்.

## ஆட்சியமைத்தல் (1991 – 1996)

- 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் இவர் தலைமையிலான கட்சி வென்றது. இவர் 1991 ஜூலை 24 இல் **முதல் முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்**.
  - இவர் தமிழ்நாட்டின் இரண்டாவது பெண் முதலமைச்சர்.
  - தமிழகத்தின் முதலாவது பெண் முதலமைச்சர் - வி.என். ஜானகி ராமச்சந்திரன் (1988).
- இவரின் ஆட்சியின் பொழுது (1991) இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு நிதியைப் பயன்படுத்தி காவற்படை பிரிவானது நவீனமையப்படுத்தப்பட்டது.
- இவர் 1991 ஆம் ஆண்டு **தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தை** (TNUSRB) உருவாக்கினார்.
  - இதன்மூலம் **உதவி ஆய்வாளர்** (Sub - Inspector) மற்றும் **காவலர்கள்** (Constables) போன்ற பதவிகளுக்கான தகுதியான நபர்கள் போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இவர் ஆட்சியின் பொழுது 1992 இல் **சேலம் மாவட்டத்தில் "தொட்டில் குழந்தைத் திட்டம்"** (Cradle Baby Scheme) தொடங்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- பெண் சிசுக்கொலையை தடுப்பதே இதன் நோக்கம் ஆகும்.

➢ இவர் 1992 – இல் **“முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்”** என்னும் திட்டத்தை கொண்டு வந்தார். இதன் குறிக்கோள்கள்:

- பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல், குறைந்தபட்சம் மேல்நிலைக்கல்வி வரையில் கல்வி அளித்தல்.
- 18 வயதிற்கு பிறகு பெண்களுக்கு திருமணம் செய்து வைத்தல்.
- சிறிய குடும்பத்திற்கு வழிகாட்டுதல்கள்.
- பெண் குழந்தைகளின் உரிமையை பாதுகாத்தல் மற்றும் குழந்தைகளின் சமூக - பொருளாதார நிலையை உயர்த்துதல்.
- ஆண் குழந்தையை முன்னிலைப்படுத்துவதை தவிர்த்தல்.

➢ இவர் ஆட்சியின் பொழுது தமிழ்நாட்டின் முதலாவது **“அனைத்து மகளிர் காவல் நிலையம்”** (AWPS) ஆனது சென்னை **ஆயிரம் விளக்கு** பகுதியில் 1992இல் ஏற்படுத்தப்பட்டது.

## சமூக நீதி காத்த வீராங்கனை

➢ **மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி** மத்திய அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு (OBC) **27% இடஒதுக்கீட்டை** ஆகஸ்ட் 13, 1990 இல் பிரதமர் **வி.பி. சிங்** வழங்கினார். இது தொடர்பான **“இந்திரா சஹ்னி வழக்கில்”** (மண்டல் வழக்கு) உச்சநீதி மன்றமானது நவம்பர் 16, 1992 இல் தீர்ப்பை வழங்கியது. அதன் ஒரு சராம்சம் என்னவெனில் **சரத்து 16(4)** ன் படி பொதுவாக இடஒதுக்கீடு ஆனது 50% ற்கும் மிகாமல் இருக்க வேண்டும்.

- தமிழ்நாட்டில் அப்பொழுது 69% இட ஒதுக்கீடு நடைமுறையில் இருந்தது. மேற்கண்ட தீர்ப்பு மூலம் 69% இடஒதுக்கீட்டிற்கு பாதிப்பு ஏற்படும் என்ற சூழல் உருவானது.
- அப்பொழுது முதலமைச்சராக இருந்த செல்வி. ஜெயலலிதா அவர்கள் 69% இட ஒதுக்கீட்டை பாதுகாக்கும் பொருட்டு தமிழக சட்டப் பேரவையில் நவம்பர் 9, 1993 இல் ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்பினார்.

SHANKAR IAS ACADEMY

- பின்னர் டிசம்பர் 1993 இல் தமிழக சட்டப் பேரவை ஆனது **“தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் மசோதா 1993”** என்ற ஒரு சட்டமசோதாவை நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்பியது. **(சரத்து 31-C ன் படி)**
    - சரத்து 31C → குறிப்பிட்ட வழிகாட்டும் கொள்கைகளை சட்டமாக பாதுகாப்பது ஆகும்.
    - சரத்து 31C என்பது அடிப்படை உரிமை ஆகும்.
- குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் ஜூலை 19, 1994 இல் மேற்கண்ட சட்ட மசோதாவிற்கு ஒப்புதல் அளித்தார்.
- மேற்கண்ட சட்டமானது ஜூலை 19, 1994 இல் தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டது. **(சட்ட எண் 45).**
- மேற்கண்ட சட்டத்தை **(தமிழ்நாடு சட்டம் 45, 1994)** அரசியலமைப்பின் **ஒன்பதாவது அட்டவணையில்** சேர்க்கப்பட வேண்டும் என்று செல்வி. ஜெயலலிதா வலியுறுத்தினார்.
    - ஒன்பதாவது அட்டவணையில் இடம்பெறும் சட்டங்களை நீதிமன்றங்கள் விசாரிக்க இயலாது.
    - ஒன்பதாவது அட்டவணை ஆனது **முதலாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 1951** மூலம் அரசியலமைப்பில் உருவாக்கப்பட்டது.
- மேற்கண்ட **“தமிழ்நாடு சட்டம் 45, 1994”** யை ஆகஸ்ட் 1994 இல் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் **“76 – வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 1994”** ஆக நிறைவேற்றப்பட்டு அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் இணைக்கப்பட்டது.
- இவ்வாறு 69% இட ஒதுக்கீட்டை சட்ட வழியில் பாதுகாத்த முதல்வர் செல்வி. ஜெயலலிதா அவர்களுக்கு **“சமூகநீதி காத்த வீராங்கனை”** என்ற பட்டத்தை திராவிடர் கழகத் தலைவர் **கி. வீரமணி** வழங்கினார்.

SHANKAR IAS ACADEMY

## 15 அம்சத் திட்டம்

- குழந்தைகளின் நலன்களை குறிக்கோளாகக் கொண்டு 1993 ஆம் ஆண்டு இவர் **“டாக்டர்.ஜெ. ஜெயலலிதா குழந்தை நலன்களுக்கான 15 அம்சத் திட்டம்”** என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

1) பிறக்கும் குழந்தையின் சராசரி எடையை 3 கிலோ என்ற நிலையை அடைதல்.
2) தடுப்பூசி மூலம் போலியோ போன்ற குறைபாடுகளை ஒழித்தல்
3) பிறப்பின் பொழுது இறக்கும் குழந்தையின் விகிதத்தை குறைத்தல். (1000 குழந்தைகளில் 30 ற்கும் குறைவு என்ற நிலையை அடைதல்)
4) குழந்தைகளிடம் காணப்படும் ஊட்டச்சத்துக் குறைப்பாட்டை குறைத்தல்.
5) குழந்தைகளின் மைக்ரோ ஊட்டச்சத்து குறைப்பாட்டை ஒழித்தல் (வைட்டமின் A குறைபாடு, இரத்த சோகையை குறைத்தல், அயோடின் குறைபாடு)
6) அனைத்து மருத்துவமனை மற்றும் தாய்-சேய் நல மையங்களையும் குழந்தை நலன் சார்ந்து அமைத்தல்.
7) பெண்கள் இளம் வயதிலேயே குழந்தை பேற்றுக்கு தயாராகுவதையும், அடிக்கடி குழந்தைகளை பெறுவதிலிருந்தும் விடுபட செய்வது.
   - பெண்களின் திருமண வயதை 21 ஆக உயர்த்துதல்
   - இரு குழந்தைகளுக்கான பிறப்பு இடைவெளி 3 ஆண்டுகள் (குறைந்தபட்சம்) என நிர்ணயித்தல்.
8) சட்டமுறையிலும், பரப்புரை மூலமும் அனைத்து குழந்தைகளும் துவக்கக் கல்வியை பெற வழிவகை செய்தல்.
9) பெண் கல்வியறிவின் நிலையை உயர்த்துதல்.
10) அனைத்து குழந்தை மையங்களிலும் சுகாதாரமான குடிநீர் மற்றும் சுகாதாரமான கழிப்பறை வசதிகளை உறுதிப்படுத்துதல்.
11) குழந்தை தொழிலாளர் முறையை படிப்படியாக ஒழித்தல்.
12) பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

SHANKAR IAS ACADEMY

13) சமூகத் தீங்கான பெண் சிசுக் கொலையை தமிழகத்தில் முற்றிலும் ஒழித்தல்.

14) குழந்தைப் பருவத்திலேயே அவர்களிடம் உள்ள மாற்றுத்திறன் (Disabilities) நிலையை கண்டறிந்து குணப்படுத்த முயலுதல்.

15) குழந்தைகளுக்கு இலவச இருதய அறுவை சிகிச்சை அளித்தல்.

- இவர் **ஒருங்கமைந்த சமூகப் பாதுகாப்புத் திட்டம்** (Comprehensive Social Security Net) என்னும் திட்டத்தை தொடங்கினார்.
- இவர் ஆட்சியில் (1993 – இல்) **தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்** ஆனது பெண்களின் உரிமைகளை பாதுகாக்கவும் பெண்களின் நலன்களை காக்கவும் ஏற்படுத்தப்பட்டது. இதன் நோக்கங்கள்:
  - பெண்களின் நலன்களை உறுதி செய்யவும் மற்றும் பாதுகாப்பு அளிப்பதும் ஆகும்.
  - பாலின வேறுபாடு தொடர்பான சிக்கல்களை தீர்ப்பது.
  - **பெண்களின்** பிரச்சனைகள் தொடர்பான மாநில அரசிடம் முறையிடுவதும் பரிந்துரைப்பதும் ஆகும்.
- இவரின் ஆட்சியின் பொழுது **மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு இயக்குநரகம்** தொடங்கப்பட்டது. (1993)
- இவர் ஆட்சியில் (1994 இல்) **கடலோர காவல் பாதுகாப்புக் குழு** (Coastal Security Group) ஏற்படுத்தப்பட்டு கடலோர பாதுகாப்பை மேம்படுத்தியது.

## தொலைநோக்குப் பார்வை 2000 (Vision 2000)

- இவர் ஆட்சியின் பொழுது (1994) தமிழக அரசினால் வெளியிடப்பட்ட **"பெண்களுக்கான கொள்கை தொகுப்புகள்"** (Policy Package for Women) ஆனது **"தொலைநோக்குப் பார்வை 2000"** (Vision 2000) என அழைக்கப்பட்டது. **இதன் 10 நோக்கங்கள்:**

1) அரசு மற்றும் தனியார் துறைகளில் பெண்கள் தனித்தே முடிவெடுக்கும் ஆற்றலை ஊக்குவித்தல்.

2) சமூக, அரசியல் மற்றும் பொருளாதார செயல்பாடுகளில் பெண்களின் நிலையை உறுதிப்படுத்துதல்.

SHANKAR IAS ACADEMY

3) வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளில் பெண்களின் பங்கேற்பை (ஆண்களுக்கு) சம அளவில் இருக்க வழி செய்தல்.

4) பெண்களுக்கு எதிரான சுரண்டல்கள், தாக்குதல்களுக்கான காரணிகளை கண்டறிதல்.

5) பெண்களுக்கான சட்டம் ஆனது அவர்களின் தன்னார்வத்துடன் தீர்வுகளை அடையச் செய்தல்.

6) திட்டங்கள் மற்றும் பரப்புரைகள் மூலம் பெண்களுக்கு எதிரான தடைகள் மற்றும் இன பாகுபாட்டை ஒழிக்க பாடுபடுதல். இதன் மூலம் பெண்களிடம் விழிப்புணர்வை அதிகரித்தல்.

7) பெண்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்பு மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்குதல் மற்றும் துவக்கப் பள்ளிகளில் பெண் குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாவது கட்டாயக் கல்வியை அளித்தல்.

8) நிலம், மூலதனம் மற்றும் தொழிற்/கல்வி நிறுவனங்கள் போன்ற வளங்களை பயன்படுத்தி பெண்களுக்கு உதவுதல்.

9) பெண்களின் வருவாயை (வருமானம்) பெருக்குவதற்காக அவர்களுக்கு வேலை வாய்ப்பிற்கான பயிற்சி அளித்து மேம்படுத்துதல்.

10) பெண்கள் அடிப்படை சுகாதாரம் மற்றும் குடும்ப நல மருத்துவ உதவிகளை பெறுவதை மேம்படுத்துதல்.

- இவர் 1995 இல் **அறிஞர் அண்ணாவின் நூல்களை** நாட்டுடைமையாக்கினார்.
- 1995 இல் தஞ்சாவூரில் **எட்டாவது உலகத் தமிழ் மாநாடு** இவரால் நடத்தப்பட்டது.
- இவர் 1995 இல் **காவல் துறை வேலைவாய்ப்பில்** பெண்களுக்கு 30% இடஒதுக்கீட்டை கொண்டு வந்தார்.

## இதர சட்ட சாதனைகள் (1991 – 1996)

- தமிழ்நாடு உயர்க்கல்வி அரசுக் கழகச் சட்டம், 1992.

SHANKAR IAS ACADEMY

- இது மத்திய அரசின் **தேசியக் கல்விக் கொள்கை (1992)** மற்றும் **பல்கலைக்கழக மானியக் குழு** ஆகியவற்றின் பரிந்துரையின் படி உயர்கல்வி அரசுக் கழகத்தை ஏற்படுத்தியது.

➢ தமிழ்நாடு பொதுச் சொத்து (பாதிப்பு தடுப்பு) திருத்தச் சட்டம், 1992.

- இது மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியாருக்கு சொந்தமான சுவர்களில் சுவரொட்டி ஒட்டுவதை தடை செய்தது.

➢ தமிழ்நாடு கல்வி நிறுவனங்கள் (கட்டாய நன்கொடை கட்டணத் தடை) சட்டம், 1992.

- இது மாணவர்களிடம் இருந்து கல்வி நிறுவனங்கள் (தனியார்) கட்டாய நன்கொடை பெறுவதை தடை செய்தது.

➢ தமிழ்நாடு சிறப்பு பாதுகாப்பு (காவல்) குழு சட்டம், 1993.

- இது முதலமைச்சர், முன்னாள் முதலமைச்சர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்தது.

➢ பரம்பிக் குளம் - ஆழியாறு திட்டச் (தண்ணீர் விநியோக ஒழுங்குமுறை) சட்டம், 1993.

- இது பாசனப் பகுதிகளை நான்கு மண்டலங்களாக பிரித்து உரிய முறையில் நீரை அளிக்கிறது.

➢ தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தம்) சட்டம், 1993.

- இது **"தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959"** – இல் உள்ள முதலாவது மற்றும் ஆறாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களை (Items) அதிகளவில் மாற்றி அமைத்தது.

➢ தமிழ்நாடு பனைப் பொருட்கள் மேம்பாட்டு வாரியச் சட்டம், 1993.

- இது பனைப் பொருட்களின் பயன்பாட்டை உயர்த்துவதற்காக தனி வாரியத்தை ஏற்படுத்தியது. மேலும் ஏற்றுமதி மூலம் அந்நிய செலவாணியை கொடுத்தது.

➢ தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 1994.

- இது **73 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 1993** – இன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- இது தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 1958 – யை மாற்றி அமைத்தது.
- இது தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் மற்றும் தமிழ்நாடு மாநில நிதிக்குழுவை ஏற்படுத்தியது.

➢ தமிழ்நாடு கட்டாய துவக்கக் கல்விச் சட்டம், 1994.

- இது பள்ளிக்கு செல்லும் வயதில் உள்ள குழந்தைகளின் பெற்றோர் அல்லது காப்பாளர்கள் தங்கள் குழந்தைகளுக்கு துவக்கக் கல்வியை அளிப்பது கடமை என்று வலியுறுத்துகிறது.
- அரசானது குழந்தைகளுக்கு கட்டாய துவக்கக் கல்வியை அளிக்க வேண்டும் என்று கூறியது.

➢ தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம், 1995.

- இது ஒரு துறைமுகத்தையோ அல்லது துறைமுகத்தின் ஒரு பகுதியையோ தனியார்மையமாக்கி அதன் மூலம் "நிதியை" அதிகரிக்க ஒரு தனியான வாரியத்தை ஏற்படுத்தியது.

## ஆட்சியமைத்தல் (2001 – 2006)

➢ இவர் தலைமையிலான கட்சி 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது.

- இவர் 2001 மே 14 இல் இரண்டாம் முறையாக தமிழக முதலமைச்சராக பதவியேற்றார்.
- சில வழக்குகளின் காரணமாக உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படி 2001 செப்டம்பர் மாதம் இவர் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.
- இவரைத் தொடர்ந்து ஓ. பன்னீர் செல்வம் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றார். (செப்டம்பர் 2001 – மார்ச் 2002)
- பின்னர் மார்ச் 2002 இல் வழக்குகளிலிருந்து விடுபட்ட இவர் 2006 வரை முதலமைச்சராகப் பணியாற்றினார்.

SHANKAR IAS ACADEMY

- பள்ளி மாணவர்களுக்கு **விலையில்லா மிதிவண்டி** (Cycle) வழங்கும் திட்டத்தை இவர் **2001 - 2002** ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தினார்.
- செல்வி ஜெயலலிதா அவர்களின் எண்ணத்தின் படி **மழைநீர் சேமிப்பு இயக்கம்** ஆனது 2001 இல் தொடங்கப்பட்டது.
    - இதன் மூலம் தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டம் உயர வழிவகை செய்யப்பட்டது.
    - இதற்காக **"தமிழ்நாடு மாநில நகராட்சிகள் சட்டம், 1920"** மற்றும் **கட்டிட விதிமுறைகள், 1973** ஆகியவற்றில் திருத்தம் செய்யப்பட்டது.
    - மழைநீர் சேமிப்புத் திட்டம் ஆனது சில மாறுதல்களுடன் இரண்டாம் கட்டமாக (Second Phase) 2003 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

## 18 அம்சத் திட்டம்

- இவர் ஆட்சியின் பொழுது (2001 - 2002) **பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான 18 அம்சங்கள் கொண்ட திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டது. (இது 1993இல் இவர் உருவாக்கிய 15 அம்சத் திட்டத்தின் விரிவாக்கம் ஆகும்)

1) முதிர் கன்னிகளுக்கான சிறப்புத் திட்டம்
2) அடிக்கடி குழந்தை பெறுவதைத் தடுத்தல்
3) பெண் சிசுக் கொலைத் தடை
4) எடை குறைந்த குழந்தை பெறுவதைத் தடுத்தல்
5) நோய்களை வருமுன் கண்டறிந்து நீக்கல்
6) இளம் வயதிலே குழந்தைப் பேற்றைத் தடுத்தல்
7) குழந்தைகளைப் பாதுகாத்துப் பராமரிக்கும் முறைகளைக் கற்பித்தல்
8) குழந்தை இறப்பைத் தடுத்தல்
9) சத்துணவு குறைப்பாட்டைக் களைதல்
10) நுண் ஊட்டச்சத்து குறைபாட்டைத் தடுத்தல்

SHANKAR IAS ACADEMY

11) பெண் குழந்தைகளைப் பாதுகாத்தல்

12) அனைத்து மருத்துவமனைகளும், தாய் – சேய் உதவி மையங்களும் பெண்களும் குழந்தைகளும் எளிதில் அணுகும்படி செய்தல்.

13) குழந்தைகளின் இதய நோயைத் துவக்கத்திலேயே கண்டறிந்து இலவசமாக அறுவை சிகிச்சை அளித்தல்.

14) குழந்தை தொழிலாளர் முறையை ஒழித்தல்

15) அனைத்து குழந்தைகளும் எட்டு ஆண்டுகள் பள்ளிக்குச் செல்வதை உறுதி செய்தல்.

16) குழந்தைகள் நல மையங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்

17) பெண்களின் கல்வி அறிவை உயர்த்துதல்.

18) சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்களின் ஆளுமைத் திறன்களை உயர்த்துதல்.

➢ இவர் கோயில்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் திட்டத்தை சென்னை **மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில்** 2002 இல் தொடங்கி வைத்தார்.

➢ 2002 ஆம் ஆண்டு **விபத்திற்கு உதவும் விரைவு மையம்** (Emergency Accident Relief Centres) ஆனது உருவாக்கப்பட்டது.

- இதன்மூலம் சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு விரைவான முதலுதவி அளித்து அவர்களை அருகே உள்ள மருத்துவமனையில் அனுமதிப்பது ஆகும்.

➢ இவர் ஆட்சியின் பொழுது (2002) **“புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டம்”** ஆனது தொடங்கப்பட்டது.

- இதன்மூலம் அதிகளவில் வேளாண் வணிகப் பிரிவு (Agri Business Unit) தொடங்கப்பட்டது.

## புதிய வீராணம் திட்டம்

➢ 2003 ஆம் ஆண்டு இவர் **புதிய வீராணம் திட்டத்தை** கொண்டு வைத்தார். இது 2004 இல் நிறைவடைந்தது.

SHANKAR IAS ACADEMY

- கடலூர் மாவட்டம் காட்டு மன்னார் கோவில் அருகே உள்ள **நாட்டார் மங்களம்** என்னும் ஊரில் அமைந்துள்ள வீராணம் ஏரியில் (வீரநாராயணபுரம் ஏரி) இருந்து சென்னைக்கு குடிநீரை கொண்டு வரும் திட்டமாகும்.
- வீராணம் ஏரி **10 ஆம் நூற்றாண்டில்** கட்டப்பட்டது.
- இதனை கட்டியவர் **ராஜாதித்ய சோழன்.**
- வீராணம் ஏரிக்கான நீரானது **கொள்ளிடம்** ஆற்றிலிருந்து **வடவார்** ஆற்றின் வழியாக வருகிறது.
- இந்த திட்டம் **அறிஞர் அண்ணா** அவர்களால் 1967 இல் துவக்கப்பட்டு பின்னர் கலைஞர் கருணாநிதி அவர்களால் செயல்படுத்தப்பட்டு பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

➢ இவரின் ஆட்சியின் பொழுது (2003) தமிழ்நாடு **புதிய தொழிற் கொள்கை** (TamilNadu New Industrial Policy) அறிவிக்கப்பட்டது.

➢ 2003 ஆம் ஆண்டு **இந்தியாவிலேயே முதல் மாநிலமாக** காவல் பட்டாலியன் (Police Battalion) பிரிவில் பெண்களை மட்டுமே உடைய (தலைமையும் ஒரு பெண்) பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

➢ இவர் 2004 ஆகஸ்ட் 14 இல் **"நமது கிராமத் திட்டம்"** என்னும் திட்டத்தை கொண்டு வந்தார்.

- இதன் மூலம் ஒரு கிராமத்தின் சாதனையை அடிப்படையாக கொண்டு அந்த கிராமத்திற்கு அரசின் உதவி அளிக்கப்படும்.
- கிராமத்தின் சாதனைகளாக கருதப்படுபவை:
    - 100% பள்ளிச் சேர்க்கை
    - குழந்தை இறப்பு குறைப்பு
    - பெண் சிசுக் கொலையை ஒழித்தல்
    - வறுமை குறைப்பு
    - கிராம சுகாதாரம்

SHANKAR IAS ACADEMY

- 2003 இல் இவர் தமிழ்நாட்டில் லாட்டரி சீட்டு விற்பனைக்கு தடைவிதித்து அதனை ஒழித்தார்.
- **குக்கூன் நடவடிக்கை** (Operation Cocoon) மூலம் காட்டில் தலைமறைவாக வாழ்ந்த வீரப்பனின் செயல்பாடுகளை முடிவுக்கு கொண்டு வந்தார். (2004)
    - இதற்காக **K.விஜயகுமார்** அவர்கள் தலைமையில் சிறப்பு தேடுதல் படைப்பிரிவு (Special Task Force) உருவாக்கப்பட்டது.
- இவர் குழந்தைப் பெயர்களின் முதலெழுத்தில் (Initial) **தாய் பெயரையும் பயன்படுத்தலாம்** என்ற சட்டத்தை இயற்றினார். (2004)
- டிசம்பர் 26, 2004 இல் தமிழகத்தை சுனாமி தாக்கியது.
    - இதில் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்விற்காக **"சேமிப்பு வழி துயர்துடைப்புத் திட்டம்"** (Savings-cum-Relief Scheme) ஆனது இவரால் தொடங்கப்பட்டது.
- இவரின் ஆட்சியின் பொழுது தமிழக அரசும், உலக வங்கியும் இணைந்து தயாரித்த **Economic Growth and Poverty Alleviation** என்னும் அறிக்கையானது **5 கொள்கைக் குறிப்புகளைக்** கொண்டது.
    - நடைமுறை சாத்தியமான நிதி சீர்திருத்தம்
    - நிதி முதலீட்டை ஊக்குவித்தல்
    - வேளாண்மை வளர்ச்சி
    - ஆட்சி சவால்களை எதிர்கொள்ளும் முறைகள்
    - வறுமை நிலையைக் கண்டறிந்து வறுமையை ஒழித்தல்

## இதர சட்ட சாதனைகள் (2001 – 2006)

- தமிழ்நாடு புகைப்பிடித்தல் மற்றும் எச்சில் துப்புதல் தடைச் சட்டம், 2002.
    - பொது இடங்களில் புகைப்பிடித்தலையும் எச்சில் துப்புதலையும் இது தடை செய்கிறது.
- தமிழ்நாடு நகராட்சி சட்டம் (திருத்தம்), 2002.

SHANKAR IAS ACADEMY

- இது சட்டமன்ற உறுப்பினரோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினரோ மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி போன்ற அமைப்புகளின் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதை தடை செய்கிறது.

➢ சென்னை பெருநகரப் பகுதி நிலத்தடிநீர் (ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம், 2002.

- 1987 ஆம் ஆண்டின் சட்டத்தை திருத்தம் செய்து கொண்டு வரப்பட்டது.
- இது நிலத்தடி நீர் குறையாமல் இருக்கவும், நிலத்தடி நீரை பெருக்கவும் மழைநீர் சேமிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

➢ திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டம், 2002.

- இச்சட்டத்தின் படி **சேர்க்காடு (வேலூர்)** என்னும் ஊரில் திருவள்ளுவர் பல்கலைக் கழகம் ஆனது உருவாக்கப்பட்டது.
- இதன் மூலம் சமூகவியல், சமூக சீர்திருத்தம், சமூக பொருளாதார மேம்பாடு மற்றும் சில புதிய வகை படிப்புகள் அறிமுகமானது.

➢ தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக் கழகச் சட்டம், 2002.

- இதன்படி திறந்தவெளி மற்றும் தொலை தூர முறையிலும் உயர் கல்வியை பெறுவதற்காக தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம் ஆனது 2002 இல் சென்னையில் ஏற்படுத்தப்பட்டது.
- இதன் குறிக்கோள் ஆனது **“எந்த நபரும் எந்த காலத்திலும் எந்த பகுதியிலிருந்தும் கல்வி கற்கலாம்”** என்பது ஆகும்.
- இந்த பல்கலைக்கழகம் ஆனது **தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக** தகுதி புள்ளியை அடிப்படையாகக் கொண்ட பாடப் புத்தகங்களை வெளியிட்டது.

➢ தமிழ்நாடு கட்டாய மதமாற்ற தடைச்சட்டம், 2002.

- ஒருவரை ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு கட்டாயமாக மதமாற்றம் செய்வதை தடை செய்தது.

➢ தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தப்படுவதை தடுக்கும் (திருத்தம்) சட்டம், 2002.

- இச்சட்டம் “தமிழ்நாடு கேளிசெய்வதை தடுக்கும் சட்டம் 1998” இல் திருத்தம் செய்யப்பட்டு உருவாக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- தமிழ்நாடு மின் விநியோகம் அல்லது நுகர்வு வரிச் சட்டம், 2003.
  - இச்சட்டம் **“தமிழ்நாடு மின்சார வரிச் சட்டம், 1939”** மற்றும் **“தமிழ்நாடு மின்சாரம் (வரி அல்லது நுகர்வு) சட்டம், 1962”** ஆகியவற்றை நீக்கியது.
  - மின் விநியோகம் தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்தது.
- தமிழ்நாடு நிதிசார் பொறுப்புச் சட்டம், 2003.
  - இது அரசின் நிதியை அதிகரிக்கவும் நிதி பற்றாக்குறையை குறைக்கவும் உள்ளிட்ட நிதிக் கொள்கைகளை வரையறை செய்தது.
- தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தம்) சட்டம், 2003.
  - இதன்படி அரசு நிறுவனமான Tamil Nadu State Marketing Corporation Limited (TASMAC) ஆனது அனைத்து வகையான மது வகைகளை விற்பனை செய்யும் உரிமையைப் பெற்றது. இதன் மூலம் இத்துறையில் தனியாரின் ஆதிக்கம் முற்றிலும் ஒழிக்கப்பட்டது.
  - **TASMAC** ஆனது **“நிறுவனங்கள் சட்டம், 1956”** – இன் படி 1983 – இல் ஏற்படுத்தப்பட்டது.
- தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி (நீக்கம்) சட்டம், 2004.
  - இச்சட்டமானது **“தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டம், 1955” (தமிழ்நாடு சட்டம் V, 1955)** யை நீக்கம் செய்தது.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகச் சட்டம், 2004.
  - இச்சட்டத்தின் படி தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் சென்னையில் ஏற்படுத்தப்பட்டு 2005 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது.
  - இந்தியாவிலேயே உடற்கல்வி மற்றும் விளையாட்டுக்கு என ஒரு தனியான பல்கலைக்கழகம் ஆனது தமிழகத்தில் தான் முதன்முதலில் ஏற்படுத்தப்பட்டது.
- தமிழ்நாடு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (சிறப்பு பகுதி) சட்டம், 2005.

SHANKAR IAS ACADEMY

- இச்சட்டமானது மத்திய அரசு உருவாக்கிய சிறப்பு மண்டலங்களை தவிர பிற பகுதிகளில் சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்கியது.

**(தொடரும்)**

SHANKAR IAS ACADEMY